# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2208/34 - 2021 ජනවාරි මස 01 වැනි සිකුරාදා - 2021.01.01

*2208/34 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

மதுவரி அறிவித்தல் இல. 01/ 2021

**ஒட்டுத்துண்டு மற்றும் ஒட்டுத்துண்டு முகாமை முறைமை**

திருத்தப்பட்டவாறான, மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 08 ஆம் மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும், அதே சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதிய, 2178/ 4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதிய, 2128/ 30 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 04/ 2019 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட விதிகளை பின்வருமாறு திருத்தியமைக்கின்றேன்.

1. விதி இல. 3 இல்,

(அ) முதல் காப்பு வாசகத்தின் (ii) ஆம் பந்தியிலுள்ள “2020, திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர்” என்ற சொற்களுக்கும் மற்றும் இலக்கங்களுக்கும் பதிலாக “2021, யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர்” என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களை பதிலீடு செய்வதன் மூலமும், மற்றும்

(ஆ) இரண்டாவது காப்பு வாசகத்தின் (ii) ஆம் பந்தியிலுள்ள “2020, திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர்” என்ற சொற்களுக்கும் மற்றும் இலக்கங்களுக்கும் பதிலாக “2021, யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர்” என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களைப் பதிலீடு செய்வதன் மூலமும்,

2. விதி இல. 13 இலுள்ள “561 நாட்கள்” என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களுக்குப் பதிலாக “742 நாட்கள்” என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களைப் பதிலீடு செய்வதன் மூலமும்,
திருத்தம் செய்கின்றேன்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, சனவரி 01.

01-554